DINA THANTHI

19 MAY 2021

PAGE 11

# புதுவை பல்கலைக்கழகத்தில் கொரோனா பாதுகாப்பு மையம்

## துணைவேந்தர் ஒப்புதல்

புதுச்சேரி, மே.19-

புதுவை மாநிலத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுதவிர வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் நாளுக்கு நாள் பாதிப்பு எண்ணிக்கை எகிறி வருவதால் படுக்கைகளையும் அதிகரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த நிலையில் புதுவை பல்கலைக்கழகத்தில் கொரோனா பாதுகாப்பு மையம் அமைக்க புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக புதுச்சேரி கவர்னருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் ஒப்புதல் அளித்த பின்னர் புதுவை பல்கலைக்கழகத்தில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொரோனா பாதுகாப்பு மையம் அமைக்கப்பட உள்ளது.

DINAMALAR

19 MAY 2021

PAGE 4

# பல்கலை., வளாகத்தில் கொரோனா சிகிச்சை பராமரிப்பு மையம் அமைக்க ஒப்புதல்

**புதுச்சேரி, மே 19–**

தொகுதி எம்.எல்.ஏ., கல்யாணசுந்தரம் கோரிக்கையேற்று புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் சிறப்பு கொரோனா சிகிச்சை பராமரிப்பு மையம் அமைக்க துணைவேந்தர் குர்மீத் சிங் கொள்கையளவில் ஒப்புதல் தந்துள்ளார்.

காலாப்பட்டு தொகுதியில் கொரோனாவை கட்டுப்படுத்த தனது அலுவலகத்தை கொரோனா சிகிச்சை மையமாக பயன்படுத்த தொகுதி எம்.எல்.ஏ., கல்யாணசுந்தரம் சுகாதாரத் துறையிடம் ஒப்படைத்தார்.

அத்துடன் புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் சிறப்பு கொரோனா சிகிச்சை பராமரிப்பு மையமாக மாற்ற வேண்டும் என துணைவேந்தர் குர்மீத் சிங்கிடம் கோரிக்கை வைத்தார்.

இக்கோரிக்கையேற்று துணைவேந்தர் குர்மீத் சிங் கொள்கையளவில் ஒப்புதல் தந்துள்ளார்.

பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக் கழக தலைமை காப்பாளரும், கவர்னருமான தமிழிசை சவுந்திரராஜன் ஒப்புதல் பெற்ற பிறகு இந்த கொரோனா பராமரிப்பு மையம் நிறுவப்படும்.

இந்த மையத்திற்கான இடம், கட்டடத்தை பல்கலைக் கழகம் வழங்கும். இதில் பல்கலைக் கழக ஆசிரியர்கள், மாணவர்களுக்கு சிகிச்சையில் முன்னுரிமை அடிப்படையில் படுக்கைகள், சிறப்பு வார்டுகள் ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை மட்டும் பல்கலை வைத்துள்ளது.

கொரோனா சிறப்பு மையம் அமைத்து காலாப்பட்டு தொகுதி மக்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் நலனுக்காக முயற்சி எடுத்த தொகுதி எம்.எல்.ஏ., கல்யாணசுந்தரத்திற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் நன்றி தெரிவித்தார்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

19 MAY 2021

PAGE 6

# புதுவை பல்கலைக்கழகத்தில் கொரோனா பராமரிப்பு மையம்

## துணைவேந்தர் ஒப்புதல்

புதுச்சேரி, மே 19: புதுவை பல்கலைக்கழகத்தில் கொரோனா பராமரிப்பு மையம் அமைக்க கொள்கை ரீதியாக துணைவேந்தர் குர்மீத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் குர்மீத் சிங், பல்கலைக்கழகத்தில் ஒரு கொரோனா பராமரிப்பு மையத்தை அமைப்பதற்கு கொள்கை ரீதியான ஒப்புதல் அளித்துள்ளார். கவர்னரின் ஒப்புதல் பெற்ற பிறகு இம்மையம் நிறுவப்படும். பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தேவையானபோதெல்லாம் சிகிச்சைக்கு முன்னுரிமை அடிப்படையில் போதுமான அளவு படுக்கைகள் மற்றும் சிறப்பு வார்டுகளை ஒதுக்கவும் பல்கலைக்கழகம் அறிவுறுத்தும். அத்துடன் புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குள் தேசிய நலனுக்காக கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுவதை தடுக்க இது ஒரு சிறப்பு ஏற்பாடாக செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAMANI

19 MAY 2021

PAGE 2

# புதுவை பல்கலை.யில் கரோனா பராமரிப்பு மையம் அமைக்க ஒப்புதல்

**புதுச்சேரி, மே 18:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் கரோனா பராமரிப்பு மையம் அமைக்க துணைவேந்தர் குர்மீத் சிங் ஒப்புதல் அளித்தார்.

இதுதொடர்பாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுவை மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், பல்கலைக்கழகத்தில் கரோனா பராமரிப்பு மையத்தை அமைப்பதற்கு கொள்கை ரீதியான ஒப்புதல் அளித்துள்ளார். ஆளுநரின் ஒப்புதல் பெற்ற பிறகு இந்த மையம் நிறுவப்படும். பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தேவையான போது சிகிச்சைக்கு முன்னுரிமை அடிப்படையில் போதுமான அளவு படுக்கைகள், சிறப்பு வார்டுகளை ஒதுக்கவும் பல்கலைக்கழகம் அறிவுறுத்தும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

THE HINDU (TAMIL)

19 MAY 2021

PAGE 3

# புதுச்சேரி பல்கலை.யில் கரோனா பராமரிப்பு மையம்

■ புதுச்சேரி

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் கரோனா பராமரிப்பு மையம் அமைக்க கொள்கை ரீதியான ஒப்புதலை துணைவேந்தர் குர்மீத் சிங் அளித்துள்ளார். ஆளுநர் ஒப்பு தலுக்குப் பிறகு இம்மையம் நிறுவப்படும் என்று தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பாக புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங், பல்கலைக் கழகத்தில் ஒரு கரோனா பராமரிப்பு மையத்தை அமைப்பதற்கு கொள்கை ரீதியான ஒப்புதல் அளித்துள்ளார். துணைநிலை ஆளுநரின் ஒப்புதல் பெற்ற பிறகு இம்மையம் நிறுவப்படும். பல்கலைக்கழகத்தின் ஆசிரிய, ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தேவையான போதெல்லாம் சிகிச்சைக்கு முன்னுரிமை அடிப்படையில் போதுமான அளவு படுக்கைகள் மற்றும் சிறப்பு வார்டுகளை ஒதுக்கவும் பல்கலைக்கழகம் அறிவுறுத்தும்.

அத்துடன் புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குள் கரோனா வைரஸ் தொற்றுநோய் பரவுவதைத் தணிக்க இது ஒரு சிறப்பு ஏற்பாடாக செய்யப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

CH-PY